[திரு. சி. என். அண்ணாதுரை] [1967 நவம்பர் 27

வருஷத்துப் பட்டியலும் இந்த வருஷத்தியப் பட்டியலைவிடக் குறைவாக இல்லை. அதாவது, தீபாவளி சமயத்தில் போனஸ் தகராறு வருகிறது. தீபாவளி சமயத்தில் பட்டாசு வெடிச் சத்தம் எப்படி நிச்சயம் காதில் விழுமோ, அப்படி தொழிலாளர்களின் கோரிக்கையும் விழத்தான் செய்யும். ஓர் இடத்தில் நடந்தது, 'இந்து' பத்திரிகைக் காரியாலயத்தில் நடந்தது. இப்பொழுது நடந்தது மட்டுமல்ல. போன வருஷம், இதே மாதத்தில் இதே தீபாவளி நேரத்தில், போனஸ் தகராறு விஷயமாக அந்தக் தொழிற்சாலை அந்த பத்திரிகாலயம் மூடப்பட்டது. அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்றால், இப்பொழுது கிட்டத்தட்ட நாற்பது நாட்களுக்கு மூடப்பட்டிருந்தது. இருந்தாலும், எந்த விதமான அமளியும் இல்லை. போன வருஷம்—தர்ம ராஜ்யம்—அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருந்த நேரத்தில், மூன்றாவது நாளில் அங்கே இருந்த கண்ணாடி ஜன்னல்கள் உடைக்கப்பட்டன. (திரு. கே. விநாயகம் : மனேஜர் அடிக்கப்பட்டார் . . . .) திரு. விநாயகம் அவர்கள் சொன்னது உண்மை, ஆனால் அப்பொழுது என்ன பேசிக்கொள்ளப்பட்டது என்றால், சர்க்கார் சம்பந்தப் பட்ட யாரோ ஒரு பெரியவருடைய அனுசரணையோடு அந்தத் தொழிலாளர்கள் அப்படி நடந்தார்கள் என்று பேசிக்கொள்ளப் பட்டது. அந்தப் பகுதியை அவர்கள் மறுப்பார். அது எனக்குத் தெரியும். அந்தப் பகுதி அவர்களைப் பாதிக்கின்ற பகுதி என்ப தால் அதை அவர்கள் மறுக்கிறார்கள். ஆனால், இப்பொழுது அமைதியான முறையிலே தகராறு தீர்க்கப்பட்டு விட்டது என்பதை எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரிவிக்கிறேன்.

மற்றபடி, தொழில் அமைப்புக்களுக்கு இப்பொழுது போடப் படும் மின்சாரக் கட்டணம் மிக குறைவாக இருக்கிறது, அதை அதிகப்படுத்த வேண்டும் என்று உறுப்பினர்கள் குறிப்பிட்ட சிறந்த யோசனைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அந்த முறையில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த, தக்க நேரத்தில் இந்த யோசனையைப் பயன்படுத்திக்கொள்ள, உங்கள் அனுமதி கிடைக்கும் என்று நம்பி, என் உரையை முடிக் கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்த ராஜன்) : இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவடைகின்றன. நாளை காலை ஒன்பது மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பி.ப. 1–21 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

* 114. *Notification issued with G.O. Ms. No. 2125, Home, dated the 3rd August 1967, making certain amendments to the Home Guard Rules, 1963 published at pages 433-438 of Part V of the* Fort. St. George Gazette, *dated the 17th April 1963, as*

* Placed on the table of the House on 25th November 1967.

subsequently amended. [Laid on the Table of the House under section 15 (4) *of the Madras Home Guard Act,* 1963 *(Madras Act III of* 1963).]

* 115. *Notification issued with G.O. Ms. No.* 1309, *Public Health, dated the* 23*rd August* 1967, *making certain amendments to the rules relating to the qualifications to the posts in the engineering establishment under municipal councils and to the rules relating to qualifications for certain posts in the Water-Supply and Drainage Departments of Municipal Councils, as subsequently amended. [Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act,* 1920 *(Madras Act V of* 1920).]

* 116. *Notification issued with Government Memorandum No.* 86613-*J*2/67, *Revenue, dated the* 30*th September* 1967, *making an amendment to the Revenue Department Notification II*-1 *No.* 1061 *of* 1965, *dated the* 12*th March* 1965, *published at pages* 1–6 *of Part II—Section* 1 *of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 15*th March* 1965. *[Laid on the Table of the House under section* 73 (5) *of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1963 *(Madras Act* 26 *of* 1963).]

* 117. *Government Memorandum No.* 78890 *CT* III-1/67-3, *Revenue, dated the* 18*th September* 1967, *exempting from the liability to Entertainments Tax the cinema show, organised by the Madras Hut Dwellers' Fire Accident Relief Committee, and conducted on the* 21*st August* 1967 *at Children's Theatre, Madras, in aid of the Chief Minister's Fire Relief Fund. [Laid on the Table of the House under section* 16 (4) *of the Madras Entertainments Tax Act,* 1939 *(Madras Act X of* 1939).]

B. Reports, notifications and Other Papers.

13. *Notification issued with G.O. P. No.* 1068, *Revenue, dated the* 12*th June* 1967, *regarding reduction of tax on sales of goods to the dealers in the districts of Kohima and Mokokchung in Nagaland under the Central Sales Tax Act,* 1956.

*** Placed on the table of the House on 25th November 1967.**